2013 மே 2]

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதி, பூங்குளம் ஊராட்சிக்கு, தேவை ஏற்படின், பசுமைத் திட்டத்தினைச் செயல்படுத்த ஆவன செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர், திராவிட இயக்கத்தின் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வியை ஒட்டியே கேளுங்கள்.*

டாக்டர் ச. துரையப்பா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

டாக்டர் ச. துரையப்பா: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 371, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

371—

சொந்தக் கட்டடம்

*__8547__—**திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி கல்லல் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2013 மே 2

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காரைக்குடியில் செயல்பட்டுவரும் கல்லல் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, ரூ. 4,000/- மாத வாடகையில் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அடிமனை இல்லாததால், காரைக்குடி நகராட்சியிலுள்ள வார்டு எண் 3, பிளாக் எண் 30, சர்வே எண் 1032/1-ல் உள்ள காலி மனையில், 5 சென்ட் இடம் கோரி, வங்கி தனி அலுவலரால் 25-5-2012-ல் பிரேரணை துணைப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டு, காரைக்குடி சரக துணைப் பதிவாளர் 18-6-2012-ல் இப்பிரேரணையை காரைக்குடி நகராட்சி ஆணையருக்குப் பரிந்துரைத்துள்ளார். காரைக்குடி நகராட்சி ஆணையரிடமிருந்து அனுமதி கிடைக்கும்பட்சத்தில், நிதியாதாரங்களுக்கு உட்பட்டு, மேற்கண்ட வங்கிக்குக் கட்டடம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணாற்றல் கொண்ட தாயே, மின்னாற்றல் தந்தாய் நீயே, பொன்னாற்றல் போற்றும் தாயே, பெருவெற்றி கண்டாய் நீயே, விண்ணோடு விளிம்பில் புகழ் படைத்தாய், மின்சார சுடராக மேன்மை பெறுவாய், இருட்டாக்கிய போலி சூரியனை காலி செய்த தாயே, வெளிச்சம் படைப்பாய் நீயே, மெழுகுவர்த்திபோல் வந்து மேன்மை தந்த தாயே, மின் உற்பத்தி உயர்வில் புது உயரம் கண்டாய் நீயே, பொருள் இல்லா ஏழைக்கும் பொன் தந்த தாயே, உன் குரல்கேட்கும் திசை எங்கும் வெற்றிச் சுடர் பரவும் தாயே, அருள் காக்கும் தாயே, எம் அம்மா வாழ்க, இருள் நீக்கும் சுடரே, இதய தெய்வமே வாழ்க எனக் கூறி, எனது உரையைத் தொடங்குகிறேன்.*

2013 மே 2]

காரைக்குடி தொகுதியில் கல்லல் கூட்டுறவு நிலவள வங்கி *1969*-ல் துவங்கப்பட்டு, இன்று வரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே நிலம் தேர்வு செய்வதற்கு நானே முன்னின்று ஏற்பாடு செய்து தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரைக்குடி தொகுதி, கல்லலில் இயங்கி வரும் நிலவள வங்கிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கும், அந்த வங்கியிலே ஒரு செயலாளர், மூன்று Supervisors, ஓர் அலுவலக உதவியாளர் வேலை பார்த்த இடத்தில், இப்போது ஒரே ஒரு Supervisor மட்டும்தான் வேலை பார்க்கிறார். ஆகவே, கூடுதலாக இரண்டு Supervisors-ஐ நியமித்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லல் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியானது, தற்போது தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருகிறது. மேற்கண்ட வங்கியில், ஒரு செயலர், ஒரு மேற்பார்வையாளர் மற்றும் ஓர் அலுவலக உதவியாளர் என மூன்று பேர் பணியாற்றி வருகிறார்கள். அந்த வங்கி கடந்த ஆண்டு *56* இலட்சத்து *53* ஆயிரம் ரூபாய் அளவில் நஷ்டத்தில் இயங்கி வந்தது. இதுவரை அந்த வங்கியானது, *685* இலட்சத்து *30* ஆயிரம் ரூபாய் அளவில் மொத்த நஷ்டத்தில் உள்ளது. எனவே, மேற்கண்ட வங்கியைப் புனரமைக்கின்ற வகையில், தற்போது நகைக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, இடம் நகராட்சியால் வழங்கப்பட்டவுடன், துறை ரீதியாக ஆய்வு செய்து, கட்டடம் கட்டுவதற்கும், வங்கி சிறப்பாகச் செயல்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

[2013 மே 2

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடியில் இயங்கி வரும் கல்லல் கூட்டுறவு நிலவள வங்கியானது காரைக்குடி தொகுதிக்குட்பட்ட சாக்கோட்டை ஒன்றியம், கண்ணங்குடி ஒன்றியம், தேவகோட்டை ஒன்றியம் மற்றும் கல்லல் ஒன்றியம் ஆகிய நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட வங்கியாகச் செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி நஷ்டத்தில் இயங்கி வருவதற்கு போதிய நிதியாதாரம் இல்லாததுதான் காரணம். மத்திய நிதி அமைச்சர் மூலைக்கு மூலை வங்கிகளைத் திறந்து வைத்து, அந்த வங்கிகள் சரிவர இயங்காத நிலையிலே, இந்த வங்கியும் அதைப்போல்தான் இருக்கும் என நினைத்து, மக்கள் பணம் செலுத்த முன்வருவதில்லை. ஆகவே, இந்த வங்கிக்குக் கூடுதலாக நிதியை ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், நான்கு ஒன்றியங்களுக்குட்பட்ட மக்களும் அதைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். இந்த வங்கி நிச்சயமாக அதிகமான இலாபத்தை ஈட்டித்தரும் வங்கியாக மாறும். அதற்கு, இந்த ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்து, அந்த வங்கி சிறந்த வங்கியாகச் செயல்படுவதற்கு உத்தரவிடுவார்களா எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்த சூழ்நிலையை மாற்றி, அவற்றைப் புனரமைக்கின்ற வகையில், ஏறத்தாழ 200 கோடி ரூபாய் அளவில் நிதியுதவி செய்து, இப்போது நகைக்கடனும் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, தொடக்க வேளாண்மை வங்கிகளுக்கு வைப்பு நிதி திரட்டுவதற்கு அனுமதி இல்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி அமைத்த பிறகு, தற்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும் தங்களுடைய நிதி ஆதாரத்தைப் பெருக்கிக்கொள்கின்ற வகையில், வைப்பு நிதியைத் திரட்டிக்கொள்ளலாம் என்று பதிவாளர் அவர்களால் ஓர் புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த வங்கியின்மீது கருணை காட்டி, அந்தப் பகுதியில் இருக்கின்ற பெரிய முதலாளிகளிடத்திலே சொல்லி, வைப்பு நிதி திரட்டி, அந்த வங்கிக்குக் கொடுத்து, அந்த வங்கியைப் புனரமைப்பதற்கு அவரும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, அரசும் தன்னுடைய கடமையைச் செய்யவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அந்த வங்கி சிறப்பாகச் செயல்படுவதற்கு துறைரீதியாக அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள் சொன்ன கருத்தும், நான் சொன்ன கருத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

வினா வரிசை எண் 372, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

372—

பாலம் கட்டுதல்

***6488—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, நாரணம்மாள்புரம் பேரூராட்சி, தாழையூத்து கடைவீதி பகுதியிலுள்ள தேசிய நெடுஞ்சாலையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*